TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102105

1. District மாவட்டம் : சிவகங்கை
PS காவல்நிலையம்: ல.ஒ.து.பிரிவு சிவகங்கை
Year ஆண்டு: 2022
FIR No. மு.த.அ. எண்: 06/2022
Date நாள்: 15.06.2022

2. (i) Act சட்டம்: prevention of corruption Act — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: 1988 as amended by the pc — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 21.05.2022
Date to நாள் வரை : 15.06.2022
Time Period நேர அளவு :
Time from நேரம் முதல் :
Time to நேரம் வரை :

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.06.2022
Time நேரம் : 17.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-I
Time நேரம் : 18.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 65 km வடக்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி புழுதிபட்டி உதவி மின் பொறியாளர் அலுவலகம், சிங்கம்புணரி தாலுகா, சிவகங்கை மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. கருப்பையா
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பழனியாண்டி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம்
(g) Address : முகவரி க.எண்.550, கரும்பட்டி, ஒடுவன்பட்டி (P), சிங்கம்புணரி T/K, சிவகங்கை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**திரு.செல்வராஜ், வணிக உதவியாளர், உதவி மின்பொறியாளர் அலுவலகம், புழுதிபட்டி, சிங்கம்புணரி தாலுகா, சிவகங்கை மாவட்டம்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**No Delay**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்பிக்கிறேன்:-** இன்று 15.06.2022 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு காவல் ஆய்வாளர் R.ஜேசுதாஸ் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி தாலுகா, முசுண்டப்பட்டி அஞ்சல், கருமிபட்டி கிராமத்தை சேர்ந்த திரு.கருப்பையா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், புழுதிபட்டி உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் வணிக உதவியாளராக பணிபுரியும் திரு.செல்வராஜ் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு, அவரின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து, பின் அன்னாரின் அனுமதி பெற்று

**(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)**

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. கருப்பையா 15.6.22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15/06/2022

Name: பெயர் R.ஜேசுதாஸ்
Rank: நிலை காவல் ஆய்வாளர் V&AC.SVG

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

15.06.2022 ஆம் தேதி மாலை 18.00 மணிக்கு, சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.06/2022, U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 -ன்படி வழக்குப் பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- **அனுப்புனர்:-** கருப்பையா, த/பெ.பழனியான்டி க.எண்.550, கருமிபட்டி, முசுண்டப்பட்டி அஞ்சல், சிங்கம்புணரி தாலுகா, சிவகங்கை மாவட்டம். **பெறுநர்,** காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, சிவகங்கை. அய்யா, நான் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி தாலுகா, முசுண்டப்பட்டி அஞ்சல், கருமிபட்டி கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் சொந்தமாக விவசாயம் செய்து வருகிறேன். சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி தாலுகா, முசுண்டப்பட்டி குரூப், கருமிபட்டி கிராமத்தில் எனக்கு சொந்தமான சர்வே எண்.79/10-ல் புதிதாக போர் போட்டுள்ளேன். இதற்கு 5 HP இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் 09.05.2022 ஆம் தேதியன்று விண்ணப்பம் செய்திருந்தேன். இது சம்பந்தமாக புழுதிபட்டி உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து வந்த அலுவலர்கள் எனது வயல்காட்டை கள ஆய்வு செய்தார்கள். அதன்பின் 31.05.2022 ஆம் தேதி காலை சுமார் 10.45 மணிக்கு மேற்படி புழுதிபட்டி உதவி பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கு பணியில் இருந்த வணிக உதவியாளர் திரு.செல்வராஜ் அவர்களை சந்தித்து எனது விண்ணப்பம் சம்பந்தமாக விபரம் கேட்டேன். அதற்கு அவர் பதிவு கட்டணம் ரூ.118/-யை உங்களின் பெயரில் அரசுக்கணக்கில் செலுத்த வேண்டும் என்று கூறினார். மேலும் அவர் என்னிடம் சம்பந்தப்பட்ட வேலையை முடித்து மின் பதிவு மூப்பு அட்டையை பெற்றுத்தர எனக்கு ரூ.3000/- தரவேண்டும் என கேட்டார். அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை இருந்தாலும் அப்போது அவரிடம் நான் பணம் எதுவும் கொண்டுவரவில்லை என்று சொன்னேன். மேலும் தாங்கள் கேட்கும் தொகை அதிகமாக உள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர் இந்த தொகையே கம்மியான தொகைதான் நீங்கள் கேட்டதால் ரூபாய் 500யை குறைத்துக்கொள்கிறேன் என்று சொல்லி, ரூபாய் 2500-யை மட்டும் தனக்கு கொடுக்குமாறு கேட்டார். மேலும் அவர் என்னிடம் எனது விண்ணப்பமானது திருப்பத்தூர் செயற்பொறியாளர் அலுவலகத்தில் சரிபார்க்கப்பட்டு, அதற்குண்டான

தங்களின் விவசாய இலவச மின் பதிவு மூப்பு அட்டையானது என்னிடம் தான் வரும் என்று சொல்லி தனக்கு உண்டான பணம் ரூபாய் 2500/-யை கொடுத்தால் மட்டுமே உங்களின் மின் அட்டையானது உங்களுக்கு கிடைக்கும் என்று சொன்னார். அதன் பின் அங்கிருந்து கிளம்பி அன்றைய தினமே பதிவுக்கட்டணம் ரூ.118/-யை அரசுக் கணக்கில் செலுத்தினேன். எனது விண்ணப்பம் சம்பந்தமாக 13.06.2022 ஆம் தேதி காலை திருப்பத்தூர் மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று கேட்டபோது, எனது விண்ணப்பமானது சரிபார்க்கப்பட்டு, அதற்குண்டான விவசாய இலவச மின் பதிவு மூப்பு அட்டையானது புழுதிபட்டி உதவிப்பொறியாளர் அலுலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக கூறினார்கள். அதன்பின்னர் இன்று (15.06.2022) காலை 09.45 மணிக்கு புழுதிபட்டி உதவிப் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று வணிக உதவியாளர் செல்வராஜ் அவர்களை சந்தித்து விபரம் கேட்டேன். அதற்கு அவர், என்னிடம் திருப்பத்தூர் செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருந்து உங்களின் விண்ணப்பம் சரிபார்க்கப்பட்டு, அதற்குண்டான விவசாய இலவச மின் பதிவு மூப்பு அட்டை எங்களின் அலுவலகத்திற்கு வந்துள்ளது என்றும், தற்போது அந்த அட்டையானது தன் வசம் இருப்பதாகவும் கூறினார். நான் அந்த விவசாய இலவச மின் பதிவு மூப்பு அட்டையை அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், என்னிடம், தான் ஏற்கனவே கேட்ட ரூ.2500/-யை கொடுத்துவிட்டு விவசாய இலவச மின் இணைப்பு பதிவு மூப்பு அட்டையை வாங்கி செல்லுமாறு கூறினார். அதற்கு நான் தற்போது என்னிடம் பணம் இல்லை என்று சொன்னபோது, அதற்கு அவர் பணம் ரூ.2500/-யை என்னிடம் நேரில் வந்து கொடுத்துவிட்டு, அந்த விவசாய இலவச மின் பதிவு மூப்பு அட்டையை பெற்றுச்சொல்லுமாறு கூறினார். அதன்பின் அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டேன். அரசுக்கு செலுத்தவேண்டிய விண்ணப்பக் கட்டணத்தை செலுத்திய பின்பு, விவசாய இலவச மின் பதிவு மூப்பு அட்டையை லஞ்சம் கொடுத்து வாங்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.2500/- லஞ்சம் கேட்ட மேற்படி வணிக உதவியாளர் திரு.செல்வராஜ் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) கருப்பையா 15.06.2022.

Sir, Received the complaint on 15.06.2022 at 17.00 hrs the geniuses of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad.

Found Prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai, Vigilance and Anti-Corruption Unit Crime No.06/2022, U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 on 15.06.2022 at 18.00 hrs and took up for Investigation. (Sd) R.Jesudoss 15.06.2022 Inspector of Police, Vigilance and Anti-Corruption, Sivagangai Detachment.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble Special Judge for PC Act cases, Sivagangai and the copies submitted to the concerned officers.

15/6/2022
காவல் ஆய்வாளர்
V&AC SVG